# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.43 (L.W.73)

| | | | |
|---|---|---|---|
| Name | Bibin | Caste | Hindu Nair |
| Father's Name | C.S.Panmanabhaal Nair | Calling | Reginal Manager, Kalyan Jewellar |
| Village | Mankara, Plakkad | Religion | Hindu |
| Taluk | Palakkad | Age | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2025.

(A1, A3, A6 absent and their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A2, A4 and A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.35 P.M.**

நான் 2010-ம் வருடத்திலிருந்து கல்யாண் ஜுவல்லரியில் பணியாற்றி வருகிறேன். தற்போது கல்யாண் ஜுவல்லரியில் தமிழ்நாட்டில் ரீஜினல் மேனேஜராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2014-2015 காலக்கட்டத்தில் நான் ஈரோட்டில் மேனேஜர் டிரைனியாக பணியாற்றினேன். அங்கு வைத்துதான் எனக்கு ஷமீல் பாஷாவை தெரியும்.

ஷமீல் பாஷா கல்யாண் ஜுவல்லர் ஈரோடு கிளையில் கஸ்டமர் கேரில் மார்கெடிங் எக்ஸிகியூடிவ்வாக வேலை பார்த்தார். சுமார் ஆறு முதல் ஏழு மாதம் வேலை பார்த்தார். 2014 நவம்பரில் அவர் அங்கு வேலைக்கு சேர்ந்து 2015 மே, ஜுன் வரை பணியாற்றினார். பின்னர் விடுமுறைக்கு அவர் ஊரான வேலூரில் உள்ள ஆம்பூருக்கு சென்றார்.

அதன் பிறகு அவர் வரவில்லை. அதைப்பற்றி விவரம் தெரிந்துதான் விசாரித்தோம். பின்னர் அவர் கலவரம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக செய்தித்தாளில் தெரிந்துக்கொண்டோம். வேலூர் சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள். சிபிசிஐடி போலீசார் என்னை ஈரோட்டில் வந்து விசாரித்தார்கள். அவர்கள் ஷமீல் பாஷாவின் விவரங்களை கேட்டார்கள். எங்களிடம் இருந்ததை கொடுத்தேன்.

ஷமீல் பாஷா பணியில் சேர்ந்தபோது பூர்த்தி செய்த விண்ணப்பம் அதை தொடர்ந்து அவரின் வருகை பதிவேடு போன்ற விவரங்களை ஒளிநகல் எடுத்து கையொப்பம் போட்டு எங்களுடைய கல்யாண் ஜுவல்லர்ஸ் பொது முத்திரையிட்டு கொடுத்தேன். நான் வழங்கிய மூன்று தாள்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.66. அதில் இரண்டு தாள்கள் A3 size, ஒரு தாள் A4 size. என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல வருவதற்கு எங்கள் அலுவலகத்திலிருந்து Authorization letter வாங்கி வந்தேனா என்றால் இல்லை. சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்த ஆவணங்களின் அசல் உள்ளதா என்றால் அந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

நான் கல்யாண் ஜுவல்லரியில் ஈரோட்டில் வேலை செய்யவே இல்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒரு வருடத்தில் அழிக்கப்பட்ட ஆவணத்திற்கு 2017-ல் ஆவணங்களை அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

எங்கள் கம்பெனியில் உள்ள ஜோனல் மேனேஜர்தான் பதிவேடுகளை பராமரிப்பார். தொழிலாளி பணியிலிருந்து நின்றுவிட்டாலோ அல்லது இறந்துவிட்டாலோ அவருக்கான பண பரிவர்த்தனையை தர அந்த தொழிலாளியின் பதிவேடுகளை பராமரிக்க வேண்டும். சிபிசிஐடி போலீசார் சம்பவம் நடந்த அடுத்த ஜுலை மாதம் என்னை விசாரித்தார்கள். என்னையும் ஜோனல் மேனெஜர் கார்த்தியையும் போலீசார் விசாரித்தார்கள். சம்பந்தமில்லமல் போலீசார் என்னை விசாரித்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.25 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.25 17:23:04 +0530